முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

60 T I

තෙවන වාර විභාගය 2023 (2024)
மூன்றாம் தவணைப் பரீட்சை 2023 (2024)
Third Term Examination 2023 (2024)

ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය I, II
வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் I, II
Business & Accounting Studies I, II

10 වන ශ්‍රේණිය
தரம் 10
Grade 10

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු යි 10
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடம்
Additional Reading time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களை தெரிவு செய்வதற்கும் முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்துக.

## வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் I

**கவனிக்க :**

1. **எல்லா வினாக்ககுக்கும் விடை எழுதுக.**
2. **இலக்கம் 01 - 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**
3. **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் சரியான விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே (X) அடையாளமிடுக.**
4. **அவ்விடைத்தாளில் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றை பின்பற்றுக.**

01. மனிதனின் நீண்ட கால வாழ்வில் ஏற்பட்ட விருத்தியானது அவனது தேவைகளை விரிவடையக் காரணமாக அமைந்தது இப்பிரச்சினைக்கு தீர்வாகவே.
1. வியாபாரம் உருவானது
2. பண்டமாற்று முறை உருவானது
3. ஒருவரினால் சிறப்பாக உற்பத்தி செய்யக் கூடிய பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன.
4. மிகையானது உருவானது

02. மனிதன் பிறந்ததிலிருந்து இறக்கும் வரை பல்வேறு பொருட்கள் சேவைகள் தேவைப்பட்டன. இத்தேவை விருப்பங்கள் மனிதர்களாலேயே நிறைவு செய்யப்படுகின்றன. வணிகம் என்பது.
1. மனித தேவை விருப்பங்களை நிறைவு செய்வதற்கு தேவையான பொருட்கள், சேவைகளின் உற்பத்தியுடன் இணைந்த பொருளாதாரமாகும்.
2. இலத்திரனியல் ஊடகங்களினூடாக கொடுக்கல், வாங்கல் இடம்பெறல்.
3. பொருட்கள் சேவைகளின் கொள்வனவு விற்பனையாகும்.
4. தற்காலத்தில் விசேட முக்கியத்துவம் கொண்ட ஒரு விடயமாகும்.

03. வணிகங்களில் அக்கறை காட்டும் பிரிவினர் எனும் வகையில் எதிர்கால முதலீட்டாளர். என்பதை சரியாக விளக்கும் கூற்று யாது?
1. வணிகத்தின் உரிமையாளர்கள் இவர்கள் ஆவர்.
2. வணிகத்திற்கு தேவையான பல்வேறு பட்ட விடயங்களை வழங்குபவர்கள்.
3. கடன் மற்றும் ஆலோசனை சேவைகளை வழங்கும் நிறுவனங்கள்.
4. எதிர் காலத்தில் வணிகத் துறையில் பிரவேசிக்க உள்ள பிரிவினராகும்.

04. வணிகத்தில் உயிர்வாழும் சனத்தொகை பொதுமக்களாவர். இதற்கு உதராணமாக குறிப்பிடக் கூடியது.
1. ஊழியர்கள் 2. முகாமையாளர் 3. ஊடகவியலாளர்கள் 4. போட்டியாளர்கள்

05. வணிகச் சூழல் என்பதை எளிமையாக விளக்கக் கூடியது.
1. அகச் சூழல்
2. புறச் சூழல்
3. வணிகத்தில் தாக்கம் செலுத்தக் கூடிய பல்வேறு காரணிகள் செயல்படுகின்ற சுற்றுச் சூழல்.
4. வணிகச் செயற்பாடுகளில் தாக்கம் செலுத்தக் கூடிய அகச் சூழல் காரணிகளாகும்.

06. கீழே தரப்பட்டுள்ள பிரிவினர்களிலும் காரணிகளிலும் கவனம் செலுத்தவும்.

- ஊழியர்கள்
- உரிமையாளர்கள்
- பூகோளச் சூழல்
- முகாமையாளர்
- போட்டியாளர்

| வணிகச் சூழல் | பிரிவினர்களும் காரணிகளும் |
|---|---|
| அகச் சூழல்<br>புறச் சூழல் | A : ……………………………….<br>B : ………………………………. |

இதனைச் சரியாகவும் முறையாகவும் ஒழுங்குபடுத்தும் போது வரும் விடை யாது?

1. A : ஊழியர் B : பூகோளச் சூழல்
2. A : ஊழியர் B : உரிமையாளர்
3. A : உரிமையாளர் B : முகாமையாளர்
4. A : போட்டியாளர் B : முகாமையாளர்

07. தொழினுட்பச் சூழல் மிக விரைவாக விருத்தியடைவதற்கான காரணமாக அமைவது.

1. வணிகச் செய்பாடுகளும், தனிநபர் வாழ்க்கைப் போக்கும்.
2. புதிய கண்டுபிடிப்புக்களும், புத்தாக்கங்களும்.
3. தனிநபர் வாழ்க்கை போக்கும், கணனித் தொழினுட்பமும்.
4. கணினித் தொழினுட்பமும், வணிகக் கருமங்களும்.

08. பின்வரும் வெளிநாட்டு நாணய வகைகளையும் அவற்றுக்காக பயன்படுத்தும் நாடுகளையும் முறையாக ஒழுங்குபடுத்தினால் வரும் விடை.

| வெளிநாட்டு நாணய வகை | பயன்படுத்தும் நாடு |
|---|---|
| 1. பவுண் | A: ஐக்கிய அமெரிக்கா |
| 2. டொலர் | B: யப்பான் |
| 3. யென் | C : ஐக்கிய ராச்சியம் |

1. 1A 2B 3C  2. 1B 2C 3A  3. 1C 2B 3A  4. 1C 2A 3B

09. வணிகங்களுக்குத் தேவையான நிதியை முதலீடு செய்து நட்ட இடர்களை ஏற்பவர்.

1. போட்டியாளர்
2. வணிகர்
3. உரிமையாளர்
4. முதலீட்டாளர்

10. தனியார் துறைக்குரிய வணிகமாகக் குறிப்பிடக் கூடியது.

1. கூட்டுறவுச் சங்கங்கள்
2. அரச திணைக்களங்கள்
3. அரச கூட்டுத்தாபனங்கள்
4. அரச கம்பனிகள்

11. நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு வணிகங்களை வகைப்படுத்தும் சரியான முறையினைக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

1. இலாபம் பெறும் நோக்கம், சமூக நலநோம்பல்.
2. இலாபம் பெறும் நோக்கம், வாடிக்கையாளர் திருப்தி.
3. வாடிக்கையாளர் திருப்தி, சமூக நலனோம்பல் நோக்கம்.
4. திருப்தி, சமூக நலனோம்பல் நோக்கம், பொருட்களின் தரம்

12. வணிகங்களின் பெயர்களைப் பதிவு செய்யும் அதிகாரி,
1. குறித்த பிரதேச சபையின் வணிகப் பெயர் பதிவாளர்.
2. குறித்த மாகாண சபையின் பதிவு செய்யப்பட்ட வணிகப் பதிவாளர்.
3. குறித்த மாகாண சபையின் பதிவு செய்யப்பட்ட பெயர்ப் பிரதிநிதி
4. குறித்த பிரதேச சபையின் பதிவு செய்யப்பட்ட பெயர் பிரதிநிதி

13. தனியுரிமை வணிகமொன்று ஆரம்பிக்கப்பட்டு எவ்வளவு காலத்தினுள் அதனைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிக்க வேண்டும்.
1. 07 நாட்களினுள் 2. 10 நாட்களினுள் 3. 14 நாட்களினுள் 4. 20 நாட்களினுள்

14. தனியுரிமை வணிக மொன்றைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவத்தை பெற வேண்டிய இடம்.
1. குறித்த மாகாண சபையின் பதிவாளர் அலுவலகத்தில்.
2. கிராம உத்தியோகத்தர் காரியாலயத்தில்.
3. பிரதேச வணிகப் பதிவாளர் காரியாலயத்தில்.
4. பிரதேச செயலாளர் காரியாலயத்தில்.

15. பின்வரும் கணனி மென் பொருளில் கணக்கீட்டு மென்பொருள் அல்லாதது எது?
1. Quick Book 2. Ms power point 3. Sage 4. wave

16. சொத்தொன்றின் பண்பு அல்லாதது.
1. கடந்த கால கொடுக்கல் வங்கல்களின் பெறுபேறாக உருவாதல்.
2. வணிகத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருத்தல்.
3. நிகழ்காலக் கடபபாட்டினைக் கொண்டிருத்தல்.
4. எதிர்காலத்தில் வணிகத்திற்கு பொருளாதார வளங்கள் உட்பாய்ச்சப்படல்.

17. சதாம் வணிகத்தின் கணக்கீட்டுச் சமன்பாடு பின்வருமாறு.
சொத்து (ரூபா) = உரிமையாளர் (ரூபா) + பொறுப்பு (ரூபா)
500.000 = 375.000 + 125.000
சதாம் தனது வீட்டின் மின்சாரக் கட்டணமாகிய ரூபா 5000 வை வணிகத்தின் பணத்தினூடாகச் செலுத்தினார். இதன் பின்னர் கணக்கிட்டுச் சமன்பாடு (ரூபாக்களில்)
1. 495.000 = 370.000 + 125.000
2. 500.000 = 375.000 + 125.000
3. 495.000 = 375.000 + 120.000
4. 500.000 = 370.000 + 130.000

18. உரிமையாண்மையில் அதிகரிப்பு = ரூபா 50.000
கடன் கொடுநரில் ஏற்பட்ட குறைவு = ரூபா 50.000
மேலே தரப்பட்ட தாக்கத்திற்குரிய சரியான கொடுக்கல் வாங்கல் யாது?
1. உரிமையாளர் தனது சொந்தத் தேவைக்காக பற்றிய காசு ரூபா 50.000.
2. உரிமையாளர் தனது சொந்தப் பணத்தினைப் பயன்படுத்தி ரூபா 50.000 கடன் கொடுநரின் கடனைத் தீர்த்தல்.
3. கடன் கொடுநருக்கு ரூபா 50.000 காசு செலுத்துதல்.
4. கடனுக்கு கொள்வனவு செய்த சரக்கு ரூபா 50.000

19. இந்திரன் தனது வணிகத்தின் பாவனைக்காகக் கொள்வனவு செய்த உபகரணத்தை ஏடுகளில் பதிவு செய்த முறை கீழே தரப்பட்டுள்ளது. அதில் சரியான இரட்டைப்பதிவு யாது?
1. கொள்வனவு கணக்கு வரவு காசுக் கணக்குச் செலவு.
2. பற்றுக் கணக்கு வரவு காசுக் கணக்கு செலவு.
3. சரக்கிருப்புக் கணக்கு வரவு காசுக் கணக்கு செலவு.
4. உபகரணக் கணக்கு வரவு காசு கணக்கு செலவு.

20. வணிகத்திலுள்ள சொத்துக்கள், பொறுப்புக்கள் உரிமையாண்மை, வருமானங்கள், செலவுகள் போன்ற உருப்படிகளை உள்ளடக்கித் தயாரிக்கப்படுகின்ற கணக்குகள் சகலவற்றினதும் கூட்டு,
1. பேரேடு எனப்படும் 2. சமன்பாடு எனப்படும்
3. நாட்குறிப்பு எனப்படும் 4. துணையேடுகள் எனப்படும்.

21. கீழே நிரல் x யில் கணக்குவகைகளும், நிரல் y யில் பேரேட்டுக் கணக்குகளும் காட்டப்பட்டுள்ளன.

| **நிரல் x** | **நிரல் y** |
|---|---|
| 1. சொத்துக் கணக்கு | A – கடன் கொடுநர் கணக்கு |
| 2. பொறுப்புக் கணக்கு | B – கடன்பட்டோர் கணக்கு |
| 3. வருமானக் கணக்கு | C – வங்கிக் கடன் வட்டிக் கணக்கு |
| 4. செலவுக் கணக்கு | D – விற்பனைக் கணக்கு |

நிரல் x யில் உள்ளவற்றை நிரல் y யுடன் முறையாகப் பொருத்தும் போது வரும் விடை,

1. A D B C  2. B A D C  3. C A D B  4. A D C B

22. "குறைதல் செலவு அதிகர்த்தல் வரவு" எனும் இரட்டைப் பதிவுக் கோட்பாட்டை வெளிக்காட்டும் கணக்கு வகை யாது?
1. மூலதனக் கணக்கு  2. கடன் கொடுநர் கணக்கு
3. கொள்வனவு கணக்கு  4. வங்கிக் கடன் கணக்கு

23. குறித்த கொடுக்கல் வாங்கலொன்றைப் பதிவு செய்வதற்குரிய இரட்டைப் பதிவு கீழே தரப்பட்டுள்ளது.
கடன் கொடுநர் கணக்கு வரவு ரூபா 10000
காசு கணக்கு செலவு ரூபா 10000
இதில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல் யாது?
1. கடனுக்கு கொள்வனவு செய்த சரக்குகள் ரூபா 10000
2. கடன் கொடுநருக்குச் செலுத்திய காசு ரூபா 10000
3. காசுக்கு சரக்குகள் கொள்வனவு ரூபா 10000
4. காசாகச் செலுத்திய செலவு ரூபா 10000

24. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்குரிய சரியான இரட்டைப் பதிவு யாது?
உரிமையாளர் தனது சொந்த தேவைக்காக பற்றிய காசு ரூபா 5000

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| 1. கொள்வனவுக் கணக்கு வரவு | 5000 | |
| காசுக் கணக்குச் செலவு | | 5000 |
| 2. காசு கணக்குச் வரவு | 5000 | |
| பற்றுக் கணக்குச் செலவு | | 5000 |
| 3. பற்றுக் கணக்கு வரவு | 5000 | |
| காசு கணக்குச் செலவு | | 5000 |
| 4. பற்றுக் கணக்கு வரவு | 5000 | |
| கொள்வனவுச் செலவு | | 5000 |

25. சரியான விடையைத் தெரிவு செய்க.

| கணக்குவகை | அதிகரித்தல் | குறைவு |
|---|---|---|
| 1. மின்சாரக் கணக்கு | செலவு | வரவு |
| 2 விற்பனையாளர் கணக்கு | செலவு | வரவு |
| 3. மோட்டார் வாகன கணக்கு | செலவு | வரவு |
| 4. வட்டி வருமானக் கணக்கு | வரவு | செலவு |

26. நிரல் x ல் முதன்மை ஏடுகளும் நிரல் y ல் மூல ஆவணங்களும் காட்டப்பட்டுள்ளன.

| நிரல் x | நிரல் y |
|---|---|
| 1. காசுக் கணக்கு | A – நாட்குறிப்பு கைச்சாந்து |
| 2. வங்கிக் கணக்கு | B – விற்பனைப் பட்டியல் |
| 3. விற்பனை நாட்குறிப்பேடு | C – பற்றுச் சீட்டு |
| 4. பொது நாட்குறிப்பேடு | D – வைப்புச் சான்றிதழ் |

நிரல் x யை y நிரலுடன் முறையாக ஒப்பிடும் போது வரும் விடை.

1. C D B A  2. C D A B  3. A D C B  4. B A C D

27. சமன் தளபாட்டு நிறுவனமானது ரூபா 300.000 பெறுமதியான தளபாட உபகரணங்களை வணிகத்தின பாவனைக்காக கடனுக்குக் கொள்வனவு செய்தது. இதனைத் தொடக்கப் பதிவு செய்வதற்குப் பொருத்தமான மூலஏடு யாது?

1. காசேடு
2. விற்பனை நாட்குறிப்பேடு
3. கொள்வனவு நாட்குறிப்பேடு
4. பொது நாட்குறிப்பேடு

28. வாடகை கட்டணத்திற்கு நிறுவனத்தினால் வழங்கப்பட்ட காசோலையானது மறுக்கப்பட்டதாக வங்கி அறிவித்துள்ளது. இம்மறுக்கப்பட்டமையைப் பதிவு செய்வவதற்குரிய சரியான இரட்டைப் பதிவு யாது?

1. வங்கிக் கணக்கு வரவு ரூபா 5000
   வாடகை கட்டணக்கணக்கு செலவு ரூபா 5000
2. வாடகைக் கட்டணக் கணக்கு வரவு ரூபா 5000
   வங்கிக் கணக்கு செலவு ரூபா 5000
3. மறுக்கப்பட்ட கட்டணக் கணக்கு வரவு ரூபா 5000
   வாடகைக் கட்டணக் கணக்கு செலவு ரூபா 5000
4. வாடகைக் கட்டணக் கணக்கு வரவு ரூபா 5000
   மறுக்கப்பட்ட காசோலைக் கணக்கு செலவு ரூபா 5000

29. 2023.01.01 இல் கஞ்சன் வணிகத்தின் வங்கிக் கணக்கில் ரூபா 100.000 அனுகூலமான மீதி காணப்பட்டது. ஜனவரி மாதத்தினுள் வங்கியுடன் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்றன.

2023.01.05 இல் வங்கியில் வைப்பிலிடப்பட்ட காசு ரூபா 100.000

2023.01.08 இல் கடன்பட்டோரிடம் (காசோலை இலக்கம் 100) கொண்ட காசோலை ரூபா 150.000 கிடைக்கப்பெற்று வைப்பிலிடப்பட்டது.

2023.01.10 இல் மின் கட்டணத்திற்காக செலுத்திய காசோலை ரூபா 2.000 (காசோலை இலக்கம் 75)

வணிகத்தின் 2023.01.31 இல் காணப்பட்ட வங்கிக் கணக்கின் மீதி யாது?

1. ரூபா 23.000
2. ரூபா 125.000
3. ரூபா 123.000
4. ரூபா 112.000

30. பெற்ற வட்டி தொடர்பான சரியான கூற்று யாது?

1. பெற்ற வட்டியானது செலவொனறாகும் என்பதுடன் பெற்ற வட்டிக் கணக்கில் அது வரவு வைக்கப்படும்.
2. பெற்ற வட்டியானது வருமானமாகும் என்பதுடன் அது பெற்ற வட்டி கணக்கில் வரவு வைக்கப்படும்.
3. பெற்ற வட்டியானது வருமானமாகும் என்பதுடன் அது பெற்ற வட்டி கணக்கில் செலவு வைக்கப்படும்.
4. பெற்ற வட்டியானது வருமானமோ அல்லது செலவோ அல்ல என்பதுடன் அது காசேட்டில் ஞாபக நிரலில் மாத்திரம் காட்டப்படும்.

31. காசேட்டின் வரவு பக்கத்தின் கழிவு நிரலின் மொத்தமானது.

1. கொடுத்த கழிவுக் கணக்கில் வரவு வைக்கப்படும்.
2. பெற்ற கழிவுக் கணக்கில் வரவு வைக்கப்படும்.
3. கொடுத்த கழிவுக் கணக்கில் செலவு வைக்கப்படும்.
4. பெற்ற கழிவுக் கணக்கில் செலவு வைக்கப்படும்.

32. வணிகமொன்றின் வங்கி கணக்கினைச் சமப்படுத்தும் போது ரூபா 12.000 செலவு மீதியொன்று கிடைக்கப் பெற்றது. இது வணிகத்திற்கு.

1. சொத்தொன்றாகும்
2. பொறுப்பொன்றாகும்
3. வருமானமொன்றாகும்
4. செலவென்றாகும்

**பின்வரும் தகவலின் உதவியுடன் 33ம், 34ம் வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

சுதன் ட்ரேட் சென்டரின் பிரதம காசாளர் 2023.11.01 இல் ரூபா 2500 வை சில்லறைக் காசாளரிடம் வழங்கினார். 2023.11.31 இல் சில்லறைக் காசாளரிடம் ரூபா 370 எஞ்சியிருந்தது.

33. ஜனவரி மாதத்தில் ஏற்பட்ட சில்லறைச் செலவுகளின் பெறுமதி யாது?
   1. ரூபா 2130 ஆகும்
   2. ரூபா 2870 ஆகும்.
   3. ரூபா 2500 ஆகும்
   4. ரூபா 2370 ஆகும்.

34. இவ்வணிகத்தில் மாதாந்த சில்லறை காசு வசக்கட்டினை 2023.12.01 தொடக்கம் ரூபா 3.000 வாக அதிகிரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறாயின் டிசம்பர் மாதத்தில் மீள நிரப்ப வேண்டிய தொகை யாது?
   1. ரூபா 3.000
   2. ரூபா 2500
   3. ரூபா 870
   4. ரூபா 2630

35. குறித்த ஆண்டின் முடிவில் விற்பனை நாட்குறிப்பேட்டின் மொத்தமானது விற்பனைக் கணக்கில் (1) …………………… வைக்கப்படுவதுடன். குறித்த திகதியிலே (2) …………………… கணக்கில் வரவு வைக்கப்படும்.
   மேலே (1), (2) வெற்றிடங்களுக்கு வரவேண்டிய சரியான விடை.
   1. வரவு, கடன்பட்டோர்
   2. செலவு, கடன்பட்டோர்
   3. செலவு, கடன் கொடுநர்
   4. வரவு, கடன் கொடுநர்

36. பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்படுகின்ற கொடுக்கல் வாங்கலினைத் தெரிவு செய்க.
   1. வியாபாரப் பொருட்களின் கடன் விற்பனை.
   2. வியாபாரப் பொருட்களின் கடன் கொள்வனவு.
   3. நிலையான சொத்துக்கள் காசுக்கு கொள்வனவு
   4. வழுக்களைத் திருத்துவதற்கான குறிப்புக்கள்.

37. பொது நாட்குறிப்பேட்டில் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலினதும் இரட்டைப்பதிவினை காட்டிய பின்னர் அது தொடர்பான சிறிய விளக்கமொன்று காட்டப்படும் அதன் பெயர்.
   1. பொழிப்பு
   2. இரட்டைப்பதிவு
   3. விளம்பல்
   4. நாட்குறிப்பு

38. அஞ்சன் என்ற தனி வியாபாரியின் வங்கி நடைமுறைக் கணக்கில் வரவு மீதியாக ரூபா 18500 காணப்பட்டது. எனினும் வங்கிக் கூற்றில் அம் மீதியானது ரூபா 25000 வைக் காட்டியது. இவ்வித்தியாசத்திற்கான காரணமாக குறிப்பிட முடியாதது.
   1. காசேட்டு வங்கிக் கணக்கில் பதிவு செய்யப்படாத எனினும் வங்கிக்கு நேரடியாக கிடைக்கப் பெற்ற பங்கிலாப வருமானம் ரூபா 6500 ஆகும்.
   2. காசேட்டு வங்கிக் கணக்கில் பதிவு செய்யப்படாத நிலையிற் கட்டளையின் பேரில் வங்கி செலுத்திய காப்புறுதிக் கட்டணம் ரூபா 65000 ஆகும்.
   3. வைப்புச் செய்யப்பட்டும் இன்னும் தீர்வையாகாத காசோலை ரூபா 65000.
   4. வழங்கபபட்டும் இன்னும் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூபா 65000

39. பரீட்சை மீதியில் பேரேட்டுக்கணக்கு மீதிகளைப் பதிவு செய்வது தொடர்பிலான சரியான கூற்று.
   1. பரீட்சை மீதியில் வரவு, செலவுகளின் கூட்டுத் தொகை சமப்படுமாயின் கணக்குப் பதிவுகளின் எவ்விதபிழையுமில்லை.
   2. பரீட்சை மீதியில் சொத்துக்கள், செலவுக் கணக்குகளின் மீதிகள் செலவில் பதிவு செய்யப்படும்.
   3. பரீட்சை மீதியானது கணக்காண்டின் ஆரம்பத் திகதியிலே தயாரிக்கப்படும்.
   4. பரீட்சை மீதியில் பொறுப்புக்கள், சொத்துக் கணக்குகளின் மீதிகள் செலவில் பதிவு செய்யப்படும்.

40. “வங்கிக் கடன் பெற்றது காசுக்கணக்கில் மாத்திரம் பதிவு செய்யப்பட்டது” இவ்வழுவினைத் திருத்துவதற்குரிய சரியான நாட்குறிப்புப் பதிவு.
   1. தொங்கல் கணக்கு வரவு வங்கிக் கடன் கணக்கு செலவு.
   2. வங்கிக் கடன் கணக்கு வரவு தொங்கல் கணக்கு செலவு.
   3. வங்கிக் கடன் கணக்கு வரவு காசுக் கணக்கு செலவு.
   4. காசுக் கணக்கு வரவு வங்கிக் கடன் கணக்கு.

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

60 T II

තෙවන වාර විභාගය 2023 (2024)
மூன்றாம் தவணைப் பரீட்சை 2023 (2024)
Third Term Examination 2023 (2024)

ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය I, II
வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் I, II
Business & Accounting Studies I, II

10 වන ශ්‍රේණිය
தரம் 10
Grade 10

**வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் I**

- **முதலாம் வினா** உட்பட பகுதி I இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பகுதி II இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிந்து மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

01. கீழே தரப்பட்டுள்ள நிகழ்வினை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.

நகரத்திலுள்ள பிரதான பாடசாலைக்கு அருகில் 'நதி புக்சொப்' எனும் பெயரில் எழுதுகருவிகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் விற்பனை செய்யும் வணிகமொன்றை நடத்திச் செல்லும் நதீம் சந்தைப்படுத்தல் தொடர்பில் டிப்ளோமா பட்டம் பெற்ற ஒருவராவார்.

ரூபா 20.000 மாதாந்த சம்பளத்தில் ருக்கியா எனும் ஊழியர் ஒருவரை இணைத்துச் கொண்டு இவ்வணிகத்தினை இவர் நடத்திச் செல்கின்றார். 2023.01.01 இல் அவரின் கணக்குப் புத்தகங்களில் பின்வரும் மீதிகள் காணப்பட்டன.

| | | |
|---|---|---|
| • கட்டடம் | ரூபா | 800,000 |
| • சரக்கிருப்பு | ரூபா | 300,000 |
| • காசு | ரூபா | 200,000 |
| • வங்கிக்கடன் | ரூபா | 500,000 |
| • உபகரணங்கள் | ரூபா | 150,000 |
| • வங்கியில் காசு | ரூபா | 400,000 |

நதீம் வணிகத்தில் 2023 ஜனவரி மாதத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| ✓ பொருட்கள் காசுக்கு கொள்வனவு | ரூபா | 25,000 |
| ✓ காசு விற்பனை | ரூபா | 100,000 |
| ✓ பொருட்கள் கடனுக்கு கொள்வனவு | ரூபா | 20,000 |
| ✓ கட்டட வாடகை | ரூபா | 16,000 |
| ✓ கடன் விற்பனை | ரூபா | 30,000 |
| ✓ காசோலை மூலம் செலுத்திய ஊழியர்கள் சம்பளம் | ரூபா | 20,000 |
| ✓ தொலைபேசி கட்டணம் செலுத்தியது | ரூபா | 2,000 |
| ✓ காசோலை மூலம் செலுத்திய மின் கட்டணம் | ரூபா | 3500 |
| ✓ காசுப்பற்று | ரூபா | 8,000 |
| ✓ கடன்பட்டோரிடமிருந்து கிடைத்த காசோலை (இக்காசோலை அத்தினத்திலேயே வங்கிலிடப்பட்டது) | ரூபா | 15,000 |

எதிர்காலத்தில் வணிகத்திற்கு தனது சகோதரனான நஸ்மியையும் இணைத்துக் கொள்வதற்கு நதீம் எதிர்பார்த்துள்ளார்.

i. அ) இவ்வணிக அமைப்பில் காணப்படுகின்ற உற்பத்திக் காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக.

ஆ) 'நதி புக்சொப்' பில் காணப்படுகின்ற பலமொன்றையும் வாய்ப்பொன்றையும் தருக?

(02 புள்ளிகள்)

ii. அ) இவ்வணிகத்தில் காணப்படுகின்ற அகச்சூழல் காரணிகள் எவை?

ஆ) அக்கறை காட்டும் பிரிவினர் எனும் வகையில் வணிகத்தினூடாக ருக்கியா நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற இரண்டு நோக்கங்களைத் தருக.

(02 புள்ளிகள்)

iii. அ) உரிமையாண்மையின் அடிப்படையில் "நதி புக்சொப்" எவ்வணிக அமைப்பு வகைக்குட்பட்டது.

ஆ) அவ்வணிக அமைப்பு வகையின் அனுகூலமொன்றையும் பிரதிகூலமொன்றையும் தருக?

(02 புள்ளிகள்)

iv. அ) எதிர்காலத்தில் தனது சகோதரரான நஸ்மியையும் வணிகத்தில் இணைத்துக் கொள்வதன் மூலம் இவ்வணிமானது எவ்வகை வணிக அமைப்பாக மாறும்.

ஆ) அவ்வணிக அமைப்பின் உச்ச இழிவுப்பங்காளர் எண்ணிக்கையினை வரையுறுத்துள்ள சட்டம் யாது?

(02 புள்ளிகள்)

v. அ) 2023.01.01 இல் இவ்வணிகத்தின் உரிமையாண்மையின் பெறுமதி யாது?

ஆ) 2023.01.01 இன் நிறுவனத்தின் கணக்கீட்டுச் சமன்பாட்டைத் தருக.

(02 புள்ளிகள்)

vi. அ) இவ்வணிகத்தின் 2023 ஜனவரி மாதத்தின் மொத்தக் கொள்வனவின் பெறுமதி யாது?

ஆ) இவ்வணிகத்தின் 2023 ஜனவரி மாதத்தின் மொத்த விற்பனையின் பெறுமதி யாது?

(02 புள்ளிகள்)

vii. அ) இவ்வணித்தின் இரு பொறுப்புக்களைத் தருக.

ஆ) இங்கு கடன்பட்டோரிடமிருந்து கிடைத்த காசோலைக்குரிய இரட்டைப் பதிவினை எழுதிக் காட்டுக.

(02 புள்ளிகள்)

viii. அ) 2023.01.31 இன் வங்கிக் கணக்கு மீதியினை கணித்துக் காட்டுக.

ஆ) காசுப் பற்றுக்குரிய இரட்டைப் பதிவினைத் தருக.

(02 புள்ளிகள்)

ix. அ) வங்கியிலுமிருந்து வங்கிக் கூற்று கிடைத்த பிறகு வணிகத்தின் வங்கிக் கணக்கு தொடர்பில் பின்வரும் தகவல்கள் வெளியாகின.

- நிலையியல் கட்டளையின் கீழ் வங்கி செலுத்திய காப்புறுதிக் கட்டணம் ரூபா 5500
- வங்கிக் கட்டணம் ரூபா 1000
- கடன்பட்டோரின் நேரடி வைப்பு ரூபா 8000

ஆ) மேலுள்ள தகவல்களைக் கவனத்திற் கொண்டு 2023 ஜனவரி மாதத்திற்கான திருத்தப்பட்ட வங்கி கணககைத் தருக.

(02 புள்ளிகள்)

x. அ) 2023.01.31 இன் காசு மீதியினைக் கணிக்க. (02 புள்ளிகள்)

## பகுதி – I வணிகக்கல்வி

(இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக)

02. மனிதன் உயிர் வாழ்வதற்கு பல்வேறு பொருட்கள் சேவைகள் தேவைப்படுகின்றன. இத்தேவைகளும் விருப்பங்களும் வணிகங்களினாலேயே நிறைவு செய்யப்படுகின்றன.

i. அ) வணிகம் என்றால் என்ன என்பதற்கான வரைவிலக்கணத்தைத் தருக.

ஆ) வணிகங்களில் பெரும்பாலனவை எந்நோக்கத்திறகாகச் செயற்படுகினற்றன.

(02 புள்ளிகள்)

ii. பின்வரும் கூற்றுக்கள் "உண்மை அல்லது பொய்" எனக் குறிப்பிடுக.

அ) சமூக நலன்புரியை நோக்காகக் கொண்டு செயற்படுகின்ற நிறுவனங்களும் காணப்படுகின்றன.

ஆ) தனியார் துறை வணிகங்களில் சமூக நலன்புரியை நோக்காகக் கொண்டு செயற்படுகின்ற நிறுவனங்கள் இல்லை.

இ) நுகர்வோர் என்ற வகையில் உமது நோக்கம் உயர்ந்த தரத்துடன் கூடிய பொருட்களை நியாயமான விலையில் பெற்றுக் கொள்வதாகும்.

ஈ) பண்டமாற்று முறையின் போது பணமும் பயன்படுத்தப்படும்.

(02 புள்ளிகள்)

iii. தொழிசார் தையல் கலையினைக் கற்றுத் தேறியுள்ள ஹசானி சிறுவர்களுக்கான பல்வேறுபட்ட தைக்கப்பட்ட ஆடைகளை இணைய வலையமைப்பினூடாக விற்பனை செய்து வருகின்றார். தமது பிரதேசத்தில் தைக்கப்பட்ட ஆடைகளை விற்பனை செய்யும் நிறுவனமொன்றை ஆரம்பிப்பதே அவரது எதிர் கால எதிர்ப்பார்ப்பாகும்.

அ) மேலே தரப்பட்டுள்ள வணிகத்தின் வணிக நோக்கமொன்றைத் தருக.

ஆ) இந்நோக்கத்தை நிறைவு செய்வதற்கு தேவையான துணை நோக்க மொன்றைத் தருக.

(02 புள்ளிகள்)

iv. மனிதன் வாழ்வதற்கு கட்டாயமாக நிறைவு செய்ய வேண்டியவை தேவைகள் எனப்படும்.

அ) அடிப்படை மனித தேவைகள் இரண்டு தருக.

ஆ) தேவைகளின் இரண்டு பண்புகளைத் தருக.

(02 புள்ளிகள்)

03. தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்ற பல்வேறு முறைகள் விருப்பங்கள் எனப்படும்.

i. அ) விருப்பங்களில் இரண்டு பண்புகளைத் தருக.

ஆ) தேவைகள் நிறைவு செய்யப்படுகின்ற முறையொன்றினை பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி பூர்த்தி செய்க.

| தேவைகள் | விருப்பங்கள் (நிறைவு செய்யப்படுகின்ற முறைகள்) |
|---|---|
| போக்குவரத்து | a. ………………………….. |
| சுகாதாரம் | b. ………………………….. |

ii. பின்வரும் கூற்றுக்கள் "உண்மை அல்லது பொய்" எனக் குறிப்பிடுக.

அ) நிதி நிறுவனங்கள் வணிகங்கள் தொடர்பில் அக்கறைக் காட்டுவதில்லை.

ஆ) உடல் உழைப்பை வழங்கி வேலை செய்யும் நபர்கள் முகாமையாளர்கள் ஆவார்.

இ) போட்டியாளர்கள் வணிகப் புறச்சூழல் காரணியொன்றாகும்.

ஈ) வரவு செலவுத் திட்டக் கொள்கையானது அரசியல் சூழல் காரணிக்கு உதாரண மொன்றாகும். (02 புள்ளிகள்)

iii. அ) நவீன கண்டுப்பிடிப்புக்கள் மற்றும் ஆக்கங்கள் காரணமாக தொழினுட்பச் சூழல் காரணியானது மிக வேகமாக மாற்றமடைந்து வருகின்றது. தொழில் நுட்பச் சூழலில் ஏற்படுகின்ற மாற்றங்கள் வணிகங்களில் தாக்கம் செலுத்துகின்ற முறையொன்றைத் தருக.

ஆ) பொருளாதாரச் சூழல் என்றால் என்ன? (02 புள்ளிகள்)

iv. பூகோளச் சூழலில் காணப்படுகின்ற பல்வேறு காரணிகளில் ஏற்படுகின்ற மாற்றங்கள் உள்நாட்டு வணிகங்களில் சாதகமான மற்றும் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன.

அ) அவ்வாறான சாதகமான தாக்கங்கள் இரண்டைத் தருக.

ஆ) பூகோளச் சூழலினால் உள்நாட்டு வணிகங்களுக்கு ஏற்படுகின்ற பாதகமான தாக்கங்கள் இரண்டைத் தருக.

(02 புள்ளிகள்)

04. i. வணிக அமைப்புக்களை பருமன் அடிப்படையில் வகைப்படுத்தும் போது பல்வேறு நியதிகள் கவனத்தில் கொள்ளப்படும். அவ்வாறு கவனத்தில் கொள்ளப்படுகின்ற அளவு சார்ந்த நியதிகள் நான்கு தருக. (02 புள்ளிகள்)

ii. கவிதா நிவாஸ் க. பொ. த (உயர்தரப்) பரீட்சையின் பின்னர் ''கவிதா பஷன்'' எனும் பெயரில் ஆடை விற்பனை நிலையமொன்றை ஆரம்பித்து நடாத்திச் செல்கின்றார். பின்னர் அவர் தனது நண்பியான ரீசாவையும் இணைத்துக் ''Kand R பஷன்'' எனும் பெயரில் நவீன வகையிலான ஆடையணிகளை விற்பனை செய்யும் வணிகமொன்றை நடத்திச் செல்கின்றார்.

அ) ''கவிதா பஷன்'' வணிகத்தைப் பதிவு செய்ய வேண்டுமா? உமது விடைக்கான காரணத்தைத் தருக.

ஆ) ''கவிதா பஷன்'' வணிகத்துடன் ஒப்பிடும் போது ''Kand R பஷன்'' வணிகத்தில் காணக்கூடிய இரு அனுகூலங்களைத் தருக. (02 புள்ளிகள்)

iii. பின்வரும் கூற்றுக்கள் ''உண்மை அல்லது பொய்'' எனக் குறிப்பிடுக.

அ) விசேட அல்லது பொது பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்படுகின்ற வணிக அமைப்புக்கள் அரச கூட்டுத் தாபனங்களாகும்.

ஆ) கூட்டுறவுச் சங்கமொன்றை ஆரம்பிப்பதற்கு அதில் இருக்க வேண்டிய ஆகக் குறைந்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை 10 ஆகும்.

இ) அரச திணைக்களங்களுக்கு ''சட்ட ஆளுமை''காணப்படுகின்றது. (02 புள்ளிகள்)

iv. அ) ஏனைய வணிக அமைப்புக்களுடன் ஒப்பிடும் போது கூட்டுறவு அமைப்புக்களில் காணக்கூடிய இரண்டு பண்புகளைத் தருக.

ஆ) பின்வரும் வணிகங்கள் எவ்வணிக அமைப்பு வகையினைச் சேர்ந்தது எனக் குறிப்பிடுக.

i) ஜெயரத்ன ஸ்ரோர்ஸ்

ii) வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் (02 புள்ளிகள்)

## பகுதி – II கணக்கீடு

(இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக)

05. i. பின்வரும் ஒவ்வொரு உருப்படிகளையும் சொத்து, பொறுப்பு, செலவு , வருமானம், உரிமையாண்மை என வகைப்படுத்திக் காட்டுக.

அ) நிலையான வைப்பு

ஆ) கடன்பட்டோர்

இ) காப்புறுதி

ஈ) விற்பனை வருமானம் (02 புள்ளிகள்)

ii. பிரியங்காவினால் நடாத்திச் செல்லப்படுகின்ற வணிகத்தின் 2023 – ஜனவரி மாதத்தின் முதல் வாரத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

அ) பெற்ற வங்கிக்கடன் ரூபா 300,000

ஆ) உதயாவிடமிருந்து கடனாகப் பெற்ற தளபாடங்கள் ரூபா 50000

இ) கடனுக்குக் கொள்வனவு செய்த சரக்குகள் ரூபா 10000

ஈ) கடன்பட்டோருக்குச் செலுத்திய காசு ரூபா 25000

மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்தும் மாற்றங்களை பின்வரும் முறையிலமைந்த அட்டவணையொன்றில் எழுதிக் காட்டுக.

| கொடுக்கல் வாங்கல்கள் | தளபாட உபகரணம் | + சரக்கிருப்பு | + காசு | = உரிமையாண்மை | + வங்கிக் கடன் | + கடன் கொடுநர் |
|---|---|---|---|---|---|---|
| அ.<br>ஆ.<br>இ.<br>ஈ. | | | | | | |

(02 புள்ளிகள்)

iii. அ) பின்வரும் கொடுக்கல் வாங்கலைப் பதிவு செய்வதற்குரிய இரட்டைப் பதிவினைத் தருக.

- தளபாட உபகரணங்கள் காசுக்கு கொள்வனவு ரூபா 100000

ஆ) காசுப்பெறுவனவு, காசுக் கொடுப்பனவுகளை என்பவற்றை பதிவு செய்வதற்குரிய முதன்மை ஏட்டினையும் மூல ஆவணங்களையும் தருக.

(02 புள்ளிகள்)

iv. புன்சிரி வணிகத்தின் 2023 ஜனவரி முதல் வாரத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- 2023.01.01 மூலதனமாக இட்ட காசு ரூபா 300,000
- 2023.01.02 இல் மின்சாரக் கட்டணம் செலுத்தியது ரூபா 2000
- 2023.01.04 இல் மீளச்செலுத்திய வங்கிக் கடன் ரூபா 10000
- 2023.01.05 இல் வாடகை வருமானம் கிடைக்கப்பெற்றது ரூபா 15000

மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை கணக்குகளில் பதிவு செய்து காட்டுக.

(04 புள்ளிகள்)

06. i. பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்களைத் தருக.

(02 புள்ளிகள்)

ii. வங்கி மேலதிகப்பற்று என்றால் என்ன?

(02 புள்ளிகள்)

iii. நிஸாம் வணிகத்தின் 2023. 04.01 இல் காசேட்டின் வரவு மீதியாக ரூபா75.000 காணப்பட்டது. இம்மாதத்தில் இவ்வணிகத்தில் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

| | |
|---|---|
| 2023.04.09 இல் | பற்றுச் சீட்டு இலக்கம் 10 கடன்பட்டோரிடமிருந்து கிடைத்த காசு ரூபா 25.000<br>வழங்கிய கழிவு ரூபா 5000 |
| 2023.04.09 | கைச்சாத்து இலக்கம் 41 கடன்கொடுநருக்கு ரூபா 3000 செலுத்திய போது குறைக்கப்பட்ட கழிவு 5% மாரும். |
| 2023.04.12 இல் | பற்றுச்சீட்டு இலக்கம் 11 கடன்பட்டோரான திவ்யாவிடமிருந்து ரூபா 20000 கிடைக்கப் பெற்ற போது குறைக்கப்பட்ட கழிவு 10% கும். |
| 2023.04.18 இல் | கைச்சாத்து இல 60 இற்கேற்ப கடன் கொடுநரான திலினினிக்குச் செலுத்திய காசு ரூபா 18500 குறைக்கப்பட்ட கழிவு ரூபா 1500 ஆகும். |

வேண்டப்படுவது கழிவு நிரல்களுடன் கூடிய காசேோட்டைத் தயாரித்து அதனை சமப்படுத்திக் காட்டுக.

(04 புள்ளிகள்)

iv. அமீர் டெக்ஸின் 2023 செப்டம்பர் மாதத்திற்கு கிடைத்த சில்லறைக் காசு வசக்கட்டு ரூபா 4000

2023 செப்டம்பர் மாதத்திற்கான சில்லறைச் செலவுகள் பின்வருமாறு.

| திகதி | கை.இல | விபரம் | தொகை (ரூபா) |
|---|---|---|---|
| 2023.09.05 | 11 | அஞ்சல் செலவு | 500 |
| 2023.09.15 | 12 | போக்குவரத்துச் செலவு | 500 |
| 2023.09.28 | 13 | முற்பணம் - ரஞ்சன் | 1000 |
| 2023.09.27 | 14 | போக்குவர்துச் செலவு | 700 |

வேண்டப்படுவது

மேலே தரப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களை சில்லறைக் காசேட்டில் பதிவு செய்து 2023.09.30 இல் அதனைச் சமப்படுத்திக் காட்டுக.

(04 புள்ளிகள்)


(12) www.PastPapers.WiKi (11)
Download Term Test Papers, Short Notes From One Place!

07. i. வணிகமொன்றின் வங்கிக் கணக்கின் வரவில் பதிவு செய்யப்படுகின்ற இரண்டு கொடுக்கல் வாங்கல்களைத் தருக.

(02 புள்ளிகள்)

ii. கணக்கீட்டில் ஏற்படுகின்ற வழுக்கள் பிரதானமாக இரு வகைப்படும். பரீட்சை மீதியில் தாக்கத்தை ஏற்படுத்தாத இரு வகை வழுக்களைத் தருக.

(02 புள்ளிகள்)

iii. கடன்பட்டோரிடமிருந்து கிடைத்து வங்கியில் வைப்பிலிடப்பட்டரூபா 75.000 காசோலை மறுக்கப்பட்டது. இதனைப் பதிவு செய்வதற்குரிய இரட்டைப் பதிவுகளைத் தருக.

(02 புள்ளிகள்)

iv. ருக்ஸான் வணிகத்தில் 2023 ஒக்டோபர் மாதத்தில் இடம்பெற்ற கடன் கொள்வனவுகள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

2023.10 01 இல பட்டியல் இலக்கம் 20 சித்தீக்கிடம் ரூபா 25000 பெறுமதியான 2023.10.12 பட்டியல் இல 21 பொருட்கள் கடனுக்கு கொள்வனவு அமீனிடம் ரூபா 50000 பெறுமதியான பொருட்கள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டன.

2023.10.15 இல் பட்டியல் இலக்கம் 22 சுமித்திடம் கடனுக்கு கொள்வனவு செய்த பொருட்கள் ரூபா 100.000 குறைக்கப்பட்ட வியாபரக் கழிவு 10% வாகும்.

வேண்டப்படுவது.

1) 2023 ஒக்டோபர் மாதத்திற்கான கொள்வனவு நாட்குறிப்பேட்டைத் தயாரிக்க.

(04 புள்ளிகள்)

2) அக்கொடுக்கல் வாங்கல்களைப் பேரேட்டிற்கு மாற்றிக் காட்டுக.

(02 புள்ளிகள்)

PAST PAPERS WIKI



(12) www.PastPapers.WiKi (12)
Download Term Test Papers, Short Notes From One Place!

LOL.lk
BookStore

# විභාග ඉලක්ක පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න






| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර | A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් | School Book | ගුරු අත්පොත්

pesuru Prakashana Private Ltd. | Akura Pilot | සමනල දැනුම | T | සතර

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

**www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න**